**இன்டிபென்டன் டெலிவிசன் நெட்வேர்க் லிமிடெட் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இன்டிபென்டன் டெலிவிசன் நெட்வேர்க் லிமிடெட்டின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் வாடகைத் திட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட டொரிங்டன் காணிக்காக 2010 முதல் 2023 வரை மதிப்பீட்டு அறிக்கைகளின் படி 05 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட்ட வாடகை திருத்தங்களின் கீழ் வாடகை செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிலுவை வாடகை ரூபா 50,805,000 ஆக இருந்ததுடன் இணங்கிய பிரகாரம் 2023 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் 10 ஆண்டுகளின் போது மாதாந்தம் சமமான தவணையாக செலுத்துவதற்கு கம்பனிக்கு கடப்பாடொன்று காணப்பட்டது. இப் பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை யல்லா பொறுப்பாக ரூபா 43,391,250 தொகையும், நடைமுறை பொறுப்பாக ரூபா 7,413,750 தொகையும் ஆக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் அதற்கு புறம்பாக மொத்த பெறுமதியும் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒரு ஆண்டிற்கு குறைந்த கால எல்லை வரையிலுள்ள பெறுமதி நடைமுறைப் பொறுப்பாகவும், ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலஎல்லையில் செலுத்துவதற்கு உள்ள பெறுமதி நீண்டகால பொறுப்பாகவும் பதியப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடை முறை மற்றும் நடைமுறையல்லா பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்ககீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் ஓய்வூதிய நலன் திட்டத்தில் தற்போது உள்ள சேவைக் கிரயம் மற்றும் வட்டி செலவினங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 25,836,359 தேறிய இலாபத்தில் இனங் காணப்பட்டிருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வரிக்கு முன் தேறிய இலாபத்தில் அப்பெறுதி மாத்திரம் சீராக்க வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி மற்றும் ரூபா 32,097,455 ஆயுட்கால நட்டமும் உள்ளடக் கப்பட்டு கூட்டுமொத்தமாக ரூபா 57,933,815 சீராக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வரிக்கு முன் தேறிய இலாபத்தில் ஆயுட் கால நட்டமும் சீராக்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது இந்த ஆண்டின் போதும் ஆயுட் கால நட்டம் ரூபா 32,097,455 தொகையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டதுடன் அது சரியானதாகும். | கணக்கீட்டு நிமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது தேறிய இலாபத்தில் இனங்காணப்பட்ட பெறுமதி மாத்திரம் சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 07 இன் 31 முதல் 42 வரையான பந்திகளின் பிரகாரம் கம்பனியால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிதி உபகரணங்களில் ஆபத்தை பகுப்பாய்வு செய்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் இடர்களைப் பகுப்பாய்வு செய்து திரவத்தன்மை தொடர்பாக தொடர்புபடுத்தும் போது சொத்துக்கள் சந்தைப் பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிகாரம் இந்த ஆண்டின் போது சொத்துக்கள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதி உபகரணங்களில் இடரைப் பகுப்பாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களில் விரிவான குறிப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்தக்களின் வகைப்படுத்தல் 2018 ஆம் ஆண்டின் அமுல்படுத்திய இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இன் பிரகாரம் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தல் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னைய காலத்தில் அமுல்படுத்தப் பட்ட இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இன் பிரகாரம் உரிய மற்றும் பயன்தரும் சகல தகவல்களும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தல் 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட இலங்கை நிதிய அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுமானத் தேய்வு சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட அரசாங்க மானியத்தில் காலக் கழிவை இனங்காணும் போது உரிய சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செலவினத்தை இனங்கண்ட காலப் பகுதின் போது அதற்கு சமமான ரீதியில் அரசாங்க மானியத்திற்குரிய பெறுமானத் தேய்வு இனங்காண வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,055,346 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான கொடுப்பனவு செய்வதற்காக 2023 ஆம் ஆண்டின் போது கிடைத்த அரசாங்க மானியத்திற்குரிய பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 1,381,918 தொகை 2023 ஆம் ஆண்டின் போது ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் அப்பெறுமதியால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த துடன் நிதிக்கூற்றுக்களில் | அரசாங்க மானியங்களுக்குரிய காலக் கழிவு இந்த ஆண்டின் போதும் முன்னைய ஆண்டுகளைப் போன்றே நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பெறுமனத் தேய்வு செய்யப்படுகின்ற சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட அரசாங்க மானியத்தின் காலக் கழிவை இனங்காணும் போது உரிய சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செலவினம் இனங் காணப்பட்ட காலப் பகுதியில் அதற்கு சமமான ரீதியில் அரசாங்க மானியத்திற்குரிய காலக் கழிவு இனங்காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரச மானிய கணக்கு மீதி அப்பெறுமியால் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | | |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 21 இன் பிரகாரம் வெளிநாட்டு நிதியிலிருந்து பேணிச் செல்லப்படுகின்ற சேமிப்புக் கணக்கில் மீளாய் வாண்டின் இறுதியில் உள்ளவாறு காசு மீதி, அத்திகதியில் காணப்பட்ட நாணய மாற்று விகிதத்தின் பிரகாரம் மாற்றப்பட்டு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 1,580,294 பெறுமதியால் அக்கணக்கின் மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதியில் நாணயமாற்று இலாபம் வருமானக் கூற்றில் இனங்காணப்படாமையினால் ஆண்டின் நட்டம் அப் பெறுமதியால் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | மத்திய வங்கி இணயத் தளத்தில் காணப்படுகின்ற அந்நியச் செலாவணி மாற்றல் பெறுமதியின் பிரகாரம் 2023 திசம்பர் 29 ஆந் திகதிய மீதி மாத்தரமே காணப்படுகின்றது. அது 2023 ஆம் ஆண்டின் இறுதியின் பெறுமதியாகும். அதன் பிரகாரம் இந்த பெறுமதியான ரூபா 3,191,762 என்ற பெறுமதி எங்களிடம் காணப்பட்ட USD 12,734.29 மாற்றப்பட்டு குறித்துரைத்த பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் காண் பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க வெளிநாட்டு நிதியில் பேணிச் செல்லப்படுகின்ற சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காசு மீதி, அத்திகதியில் காணப்பட்ட அந்நியச் செலாவணி விகிதத்தின் பிரகாரம் மாற்றப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) | வசந்தம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக 2019 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 09 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொலைக் காட்சி நாடகங்கள் ஒலிபரப்புவதற்காக மீளாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டி காணப்பட்ட நிலுவைப் பெறுமதி அமெரிக்க டொலர் 552,555 மேற்கூறப்பட்ட நியமத்தின் பிரகாரம் அத் திகதியில் காணப்பட்ட அந்நியச் செலாவணி விகிதத்தின் பிரகாரம் மாற்றப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 66,877,990 பெறுமதியால் அட்டுறு கணக்கின் மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டதுடன் அப்பெறுமதியால் அந்நியச் செலாணி மாற்றல் நட்டம் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டி ருக்கவில்லை. இதன் காரணமாக ஆண்டின் நட்டம் அப்பெறுமதியால் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | இதன் போது தற்போதைய தொகையை செலுத்தாதிருந்ததுடன் நிலையான அந்நியச் செலாவணி விகிதத்தில் செலுத்தப்படுகின்றது. தற்போது காணப்படுகின்ற நிதிப் பெறுவனவுகளின் பிரகாரம் அன்றன்டைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பேணிச் செல்வதற்காக முன்னுரிமை வழங்கப் படுகின்றது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் இந்த சீராக்கங்கள் மேற் கொள்ளப்பட்டதுடன் கொடுப்பனவு செய்கின்ற சந்தர்ப்பத்தின் போது குறித்துரைத்த பிரகாரம் சீராக்கங்களை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியதாகக் காணப்படுகின்ற நிலுவைப் பெறுமதி அத் திகதியில் காணப்பட்ட அந்நியச் செலாவணி மாற்றல் விகிதத்தின் பிரகாரம் மாற்றப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு இலக்கம் 24 இந் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் பிரதான முகாமைத்துவத்தின் நபரைத் தொடர்புப டுத்துவதற்குரிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 30 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் தொடர்பாக உரிய தகவல்களை வெளிப்படுத்தற்கு குறிப்பிடுகின்றோம். | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தொடர்புடைய தரப்பினர் தொடர்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஐ) | சட்ட ரீதியான அறவீடுகள் இயலுமான வரை காணப்படாதிருந்தமையை காண்பிக்கின்ற, ஊழியர் நிதி மோசடியின் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 1,213,120 தொகை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் பிரகாரம் நிகழகத்தக்க சொத்தொன்றாகக் கருதி குறிப் பொன்றில் மாத்திரம் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டதன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஊழியர் நிதி மோசடி யினால் நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 1,213,120 ஆக இருந்ததுடன் இதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை கள் எடுத்து அந்த ஊழியரிடமிருந்து அறவிடுவதற்கு சொத்துக்கள் காணப்படாதிருந்ததாக சட்டப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையை அறவிடுவிடுவதற்கு முடியாமையினால் தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு நிகழத் தக்க சொத்தொன்றாகக் கருதி குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்து வதற்கு குறிப்பிடுகின்றோம். | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிகழத் தக்க சொத்துக்களை குறிப்பொன்றின் மூலம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஒ) | தொழில்நுட்ப பிரச்சினைகளுக்குரிய தொழில் ஆணையாளர் நாயகத்தின் பேரில் இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 42,635,021 நிதிக் கூற்றுக்களில் வைப்பு மற்றும் பெறவேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் பிரகாரம் இது தொடகுறிப்புக்களின் மூர்பாக நிதிக் கூற்றுக்களில் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொழிநுட்ப பிணக்குகளுக்குரிய தொழில ஆணையாளர் நாயகத்தின் பேரில் வைப்புச் செய்யப்பட்ட இந்தத் தொகை நிதிக் கூந்நுக்களில் குறித்துரைத்த பிரகாரம் காண்பிக்கப்பட்டள்ளது. அது குறிப்பக்களின் மூலம் மேலும் வெளிப்படுத்துவதற்கு குறிப்பிடுகின்றோம். | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க குறிப்புக்கள் மூலம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | சுயமாக ஓய்வு பெற்றுச் செல்வும் முறைமையொன்றின் கீழ் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்காக செலுத்தவேண்டிய இழப்பீட்டுப் பணத்தை தீர்த்துவைப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 49,500,000 அரசாங்க மானியம், நிதிக்கூற்றுக்களில் வெளியடப்பட்ட மூலதனத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த இழப்பீட்டுப் பணம் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 80, 85 ஆம் பத்திகளின் பிரகாரம் மீள் கட்டமைத்தல் செலவிகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கடுகள் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட அரசாங்க மானியம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்குப் பறம்பாக அந்தத் தொகை செலுத்த வேண்டியவைகளில் காண்பித்து மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக வெளிப்படுத்தல் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுயமாக ஓய்வு பெற்றுச் செல்லும் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்காக செலுத்தவேண்டிய ரூபா 49,500,000 அரசாங்க மானியம் திறைசேரியிலிருந்து திசம்பர் 31 ஆம் திகதி கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்காக காலம் ஒன்று காணப்படாதிருந்ததுடன் அந்த சகல பணமும் 2024 ஆம் ஆண்டின் போது உரிய வகையில் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதனைக் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க மீள் கட்டமைத்தல் செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் அரசாங்க மானியம் தொடர்பான குறிப்புக்களின் மூலம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஔ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 25 முதல் 27 வரையான பந்திகளின் பிரகாரம் கம்மனியால் 2022 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட கிரயம் ரூபா 14,433,575 ஆன நிதி மற்றும் முகாமைத்துவ மென்பொருள் முறைமை மற்றும் ரூபா 6,700,000 கிரயமான மனிதவள முகாமைத்துவ மென்பொருள் முறைமை என்பன மீளாய்வாண்டு வரையிலும் வழங்குளரால் இஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும் கம்பனியால் இந்த மென்பொருட்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 21,133,575 கற்பனைசொத்து மற்றும் கடன் கொடுத்தோக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கற்பனைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் நிதி நிலைமைக் கூற்றில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. நிதி மற்றும் நிதி முகாமைத்துவ மென்பொருள் முறைமைக்காக செலுத்தப்பட்ட ரூபா 4,310,073 தொகை மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் வைப்புக்கள் மற்றும் முற்பணத்தின் கீழ் | நிதி மற்றும் தகவல் முகாமைத்துவ மென்பொருள் மற்றுறும் மனிதவள முகாமைத்துவ மென்பொருள் முறைமை தற்போது குறித்துரைத்த பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வில்லை. அது பூர்த்தி செய்யப்படாத நிலை (work in progress) காணப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தின் போது அந்த மென்பொருன் முறைமைகளுக்கு தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிறுவன்ததின் தேவையின் பிரகாரம் தயாரிக்கப்படுகிறது. இந்த மென்பொருள் முறைமை குறித்துரைத்த ரீதியில் நிறுவனத்தில் இஸ்தாபிக்கப்பட்ட பின்னர் நிதிக் கூறுக்களில் பெறுமானத் தேய்வு மற்றும் | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க மென்பொருள் முறைமையின் கிரயம் கற்பனைச் சொத்துக்கள் மற்றும் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட்டிருச்ததுடன் அதற்காக கம்பனியால் அதன் காலம் கருதி கொள்கையின் கீழ் ரூபா 2,886,715 பெறுமானத் தேய்வு செலவினம் வருமானக் கூற்றில் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்த ஏனைய பதிவுகளை இட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிகாக கம்பனியின் ஊளியர்களுக்கு, பெறப்படாத விடுமுறைகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 18,522,547 ஆக இருந்த போதும் அட்டுறு செலவினமாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 20,819,655 காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது நட்டம் ரூபா 2,297,108 இனால் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | ஊளியர்களால் பெறப்படாத மருத்துவ விடுமுறைகளுக்காக காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி சரியாக உள்ளதுடன் இலாபம் குறைமதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படவில்லை. | அட்டுறு செலவினங்கள் சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் அகற்றுதல் மூலம் ரூபா 16,737 தொகை மோட்டார் வாகமொன்றை அகற்றுவதன் மூலம் கம்பனிக்கு ரூபா 1,323,000 தொகையொன்று கிடைத்திருந்ததுடன் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது தேனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுதலின் மூலம் கிடைதத காசுப்பாய்ச்சல் ரூபா 2,783,383 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் ரூபா 1,443,646 பெறுமதியால் மஅதிகரித்து காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சுகல சொத்துக்களும் அகற்றியதால் கிடைத்த வருமானம் இதில் உள்டக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுவதன் மூலம் கிடைத்த பணம் சரியாக கணிப்பிடப்பட்டு காசுப்பாய்ச்ல் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) கம்பனிக்குச் சொந்தமான கிரயம் ரூபா 8,976,339 ஆன 04 வாகனங்களில் ரூபா 2,250,000 ஆன வாகனமொன்று ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டுள்ளது. எனினும் அந்த வாகனங்களின் கிரயம் 2023 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி 2020 திசம்பர் 31 முதல் 2023 சனவரி 01 ஆம் திகதி வரை ரூபா 8,976,339 இனாலும், 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,726,339 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த மோட்டார் வாகன விற்பனை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தின் போது இதற்குரிய கிரயம் முழுமையாக பெறுமாகத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்குச் சொந்தமாக சொத்துக்ளை சரியாக இணங்கண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பிற்போட்ட வரி பொறுப்பு கணிப்பிடும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பொறுமானத் தேய்வின் அடிப்படையில் பிற்போட்ட வரி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 17.1 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிற்போட்ட வரி மற்றும் பொறுப்புக்கள் பகுப்பாய்வு செய்து குறிப்பு 17.1 இன் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு பெறுமதியில் காண்பித்தல் தவறவிடப்பட்டுள்ளதுடன் அதை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிற்போட்ட வரி பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்களின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2022 ஆம் ஆண்டில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி 02 தொலைக்காட்சி நாடகங்களுக்குரிய 2023 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட் நிலுவை பணப் பெறுமதி ரூபா 2,296,000 தொகை 2022 ஆம் ஆண்டிற்குரிய உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை கொள்வனவு செய்யும் விடயத்தில் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை கொள்வனவு செய்யும் கிரயத்தின் கீழ் இணங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் பெறுமதியால் மிகை மதிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நாடகங்களுக்காக செலுத்துதல் அந்த ஆண்டின் அட்டுறுவாக மேற்கொள்ளப்பட்டதுடன் தவறுதலாக அந்தக் கொடுப்பனவுகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளும் போது உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை கொள்வனவு செய்யும் கிரயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத’தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலப்பகுதிக்குரிய கிரயத்தை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | சுயாதீன தொலைக் காட்சி சேவையில் கடன்பட்டோர் கணக்கு தவறுதலாக பதியப்பட்டிருந்த ரூபா 1,866,829 பெறுமதி மற்றும் இரு தரப்பினரால் சேவைகள் பரிமாற்றப்பட்ட மையினால் கணக்குகளில் இருந்து அகற்ற வேண்டிய ரூபா 4,193,100 பெறுமதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்குகளில் பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் கடன் பெற்றோர் பெறுமதி ரூபா 6,059,929 இனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதியின் அடிப்படையில் இழப்பீடுடு நட்டம் கணிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 4,544,947 இனால் திரண்ட நட்டம் அதிகரித்ததன் மூலம் நிதிக் கூற்றுக்களில் நிறுத்தி வைக்கப்ட்டிருந்த இலாபம் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | கணனி முறைமையின் வழுக்களின் நிலைமையின் அடிப்படையில் பட்டியல் பத்திரம் அதிகரித்து கணிப்பீடு செய்யப்பட்டமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது உரிய அங்கீகாரத்தைப் பெற்று கடன் மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். மேலும் மீள் சந்தை கொடுக்கல் வாங்களின் அடிப்படையில் அறவிடவேண்டிய ரூபா 4,193,100 தொகை காண்பிக்கப்பட்ட பொதும் உள்ளபடியாக இரு தரப்பினடமிருந்தும் சேவைகள் | கடன்பட்டோர் மீதி மற்றும் இழப்பீட்டு நட்டங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் தேவையான அங்கீகாரத்தை பெற்று அதனை பதிவேடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கம்பனியால் செலுத்த வேண்டிய பணிக்கொடை செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய சமூகப் பாதுகாப்பு வரி தொகைகள் முறையே ரூபா 17,882,595 மற்றும் ரூபா 5,837,751 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் நியதிச் சட்ட செலுத்தவேண்டியவைகளின் கீழ் அப்பெறுமதி முறையே ரூபா 2,328,743 மற்றும் ரூபா 346,132 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் சேமிப்பு மீதி மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அட்டுறு கணக்காய்வுக் கட்டணம் ரூபா 5,498,986 நியதிச் சட்ட செலுத்த வேண்டியவைகளில் காண்பிப்பதற்குப் பதிலாக ஒதுக்கீடுகள் மற்றும் அட்டுறு செலவினத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் உரிய பிரகாரம் வகைப்படுத் தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | நியதிச் சட்ட ரீதியில் செலுத்த வேண்டியவை களின் பெறுமதி சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |
| (ஏ) | உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,037,763 பெறுமதியான 12 ஆங்கிலத் திரைப் படங்களின் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக முன்செலுத்ததப்பட்ட கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நிறுத்தல் வைத்தல் உழைப்புக்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தொகை திரைப் படங்களுக்காக செலுத்தப்பட்ட முற்பணத் தொகையாகும். அந்த திரைப்படங்கள் பிரைம் வானொலி ஒலிபரப்பிற்காக கொள்வனவு செய்யப் பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சி நிரல் கைவிடப்பட்டமையினால் ஒலிபரப்புவதற்கு முடியாதிருந்ததுடன் ஏனைய அலை வரிசைகளிலும் ஒலி பரப்புவதற்கு முடியாதிருந்தது. இந்த திரைப்படம் ஒலிபரப்புதல் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்துள்ளது. | செலவினங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | அரச நிறுவனத்திற்கு வழங்கப்படாதிருந்த சேவை களுக்காக விநியோகிக்கப்பட்ட ரூபா 4,105,500 பட்டியலின் பெறுமதியொன்று கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதியை தீர்த்துவைப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் | இந்த நிறுவனம் கலைக்கப்பட்டுள்ளதுடன் நிதியை பெற்றுக் கொள்வதற்குரிய பிரிவுகளை தொடர்பு படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் வசதியினமாக இருந்தது. | வழங்கப்படாதிருந்த சேவைகளுக்காக பட்டியல் விநியோகிக்காதிருத்த ல் வேண்டும். கடன் பட்டோர் மீதி சரியாக கணக்குகளில் |

| | | |
|---|---|---|
| காரணமாக கடன்பட்டோர் பெறுமதி அப் பெறுமதியால் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்ததுடன் அதனடிப்படையில் இழப்பீட்டு நட்டம் கணிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 3,079,125 இனால் திரண்ட நட்டம் அதிகரித்ததன் மூலம் நிதிக் கூற்றுக்களில் நிறுத்திவைக்கப்பட்ட இலாம் குறைத்து வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரையைப் பெற்று பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் பதிவேடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காண்பிக்கப்படல் வேண்டும். |

**1.5.3 அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

| **அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கம்பனியால் விநியோகிக்கப்பட்ட பட்யல்களின் பெறுமதி மற்றும் ஒலிபரப்புக் காலத்திற்குரிய வீத பெறுமதியை ஒப்பீடு செய்த போது வீதப் பெறுமதி ரூபா 129,461,000 ஆன வியாபார அறிவித்தல்களுக்குரிய பட்டியல் பெறுமதி ரூபா 10,286,795 ஆக இருந்ததுடன் சேவைப் பங்களிப் பாளருக்கு 81-98 சதவீதம் ஆன மிகவும் உயர்ந்த கழிவு வழங்கப்பட்டிருந்தது. ஆகக் கூடிய வருமானம் உழைக்கக்கூடிய வானொலி காலத்தின் போது இவ்வாறு மிகவும் உயர்ந்த கழிவு கையளித்ததன் மூலம் கம்பனியின் வருமானம் உழைக்கும் வழிகள் அதிகளவில் வரையறைக்கு உட்படுவதற்கு காரணமாக இருந்தது. மேலும் முகவர் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிவித்தல்களை ஒலிபரப்புவதற்குரிய பட்டோலைகளுக்காக உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), நிகழ்ச்சிநிரல் பிரிவுத் தலைவர், சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் போன்ற ரீதியில் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அதற்காக உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) அல்லது சந்தைப்படுத்தல் பிரிவுத் தலைவரிமிருந்தும் அங்கீகாரம் பெறப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இவ்வாறு எங்களுடன் தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான முகவர் நிறுவனங்களிலிருந்து பெறப்படுகின்ற அறிவித்தல்களுக்காகவே ஆகும். தற்போது இந்த குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளது என தயவுடன் அறியத் தருகின்றோம். | ஆகக் கூடிய வருமானம் உழைக்கக் கூடிய வானொலி காலத்தில் சேவைப் பங்களிப்பாளருக்கு பொருத்தமற்ற உயர்ந்த கழிவு வழங்காதிருத்தல் வேண்டும். கம்பனியின் வருமானத்தை உழைக்கும் வழிகளை அதிகளவில் வரையறுக்காதித்தல் வேண்டும். அறிவித்தல்களை ஒலிபரப்புவதற்குரிய பட்டியல்களுக்காக உரிய அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற வியாபார பெற வேண்டிய மீதிகள் ரூபா 905,105,718 ஆக இருந்ததுடன் அதில் சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஒரு வருடம் மற்றும் ஒரு வருடத்தை மிஞ்சிய மீதி ரூபா 222,661,338 ஆகும். வசந்தம் தொலைக்காட்சி அலை வரிசையில், லக்ஹண்ட வானொலி ஒலிபரப்பு அலைவரிசை மற்றும் வசந்தம் வானொலி அலைவரிசையில் ஒரு வருடத்தை மிஞ்சிய மீதிகள் முறையே ரூபா 46,033,464 தொகை, ரூபா 8,906,832 மற்றும் ரூபா 1,503,744 ஆக இருந்தது. அந்த மீதிகளை அறிவிடுவதற்காக கம்பனியால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ரூபா 1,358,640 பெறுமதியுடைய கடன்பட்டோர் மீதிக்காக மாத்திரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தற்போது வரையில் ரூபா 19.7 மில்லியன் மாத்திரமான அளவில் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 5 மில்லியன் மாத்திரம் சட்டப் பிரிவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் எஞ்சிய அளவுகளின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டின் போது வருமானத்தில் 20 சதவீத அளவு அதிகரித்ததன் காரணமாக கடன் பட்டோர் மீதி அதிகரித்திருந்ததை அறியத்தருகின்றோம். | கடன்பட்டோர் மீதியை தாமதமின்றி அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டுவரப்படு கின்ற கூட்டுப்பெறுமதி ரூபா 18,795,407 ஆன பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டின் போது இந்த மீதி தொடர்பாக தேவையான தகவல்களைப் பெற்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரையினைப் பெற்று பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கடன் பட்டோரில் இருபது பேர்களை உள்ளடக்கிய மீள்விற்பனை கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 28,824,030 ஆக இருந்ததுடன் கம்பனியால் உரிய சேவைகள் வழங்காமை காரணமாக 05 வருடங்களை விஞ்சிய மீள்விற்பனை கடன்பட்டோர் மீதியின் கூட்டுமொத்தம் ரூபா 17,288,167.8 ஆக காணப்பட்டது. இந்த மீதிகளை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உறுதிப்படுத்துகின்ற பட்டியல் மற்றும் ஆவணங்கள் குறித்துரைத்த பிரகாரம் கிடைக்காமையின் காரணமாக இந்த மீதி சில காலமாக புத்தகங்களில் காண் பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உரிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் நீண்ட காலம் காணப்படுகின்ற மீள் கொடுக்கல் வாங்கல் மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீள் வியாபார மீதிகளை அறவிடுவதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பல்வேறு நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்ட மீள் சந்தை உடன்படிக்கைகளுக்குரிய சேவை வழங்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் ரூபா 70,702,230 மீள் விற்பனை கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுடன் இந்த மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் ஒரு வருடத்தை மிஞ்சிய மீதி ரூபா 69,702,230 அதாவது 98.5 சதவீதம் ஆகும். | மீள்விற்பனை கொடுக்கல் வாங்கல்களுக்குரிய சேவைகள் அல்லது பொருட்கள் வெளித் தரப்பினரிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் ஒலிபரப்புக் காலத்தை நிறுவனத்தால் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படாதிருந்ததுடன் இந்த ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையினைப் பெற்று பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் கணக்குகளிலிருந்து அகற்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது. இது நிறுவனத்தின் நட்ட நிலைமை குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | மீள்விற்பனை கொடுக்கல் வாங்கல்களுக்குரிய சேவைகளை வழங்கி கடன் கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 200,524,492 ஆன ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் கூட்டுப்பெறுமதி ரூபா 1,220,239 ஆன 25 கடன்கொடுத்தோர் மீதிகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் முன் கொண்டுவரப்படுவதுடன் அப்பெறுமதியை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | ரூபா 1,220,239 பெறுமதிக்குரிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக முன்கொண்டு வரப்படுகின்ற மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்படுகின்ற நிறுத்திவைத்தல்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 3,661,576 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,590,857 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து முன்கொண்டு வரப்படுகின்றது. | நிறுத்திவைத்தல்களில் 03 வருடங்களுக்கு முற்பட்ட பெறுமதி 2024 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீண்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிறுத்தி வைத்தல் மீதிகளை இனங் கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையில் ரூபா 197,343,665 ஆன மொத்த வியாபார கடன் கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 16,448,517 தொகையும், 4-6 வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 26,460,747 தொகையும், 07-10 வருடங்களுக்கிடையிலான ரூபா 33,792,289 தொகையும் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 49,939,178 தொகையும் ஆக இருந்ததுடன் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | மாதாந்தம் காசு பெறுவனவுகளின் பிரகாரம் நாளாந்த நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு முன்னுரிமை வழங்கி ஏனைய கடன் கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படு மென அறியத் தருகின்றோம். | கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்தி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | யட்டியான்தொட்ட ஒலிபரப்பு கூடத்திற்குரிய காணிக்காக வாடகை திருத்தங்களின் கீழ் கொடுப்பனவு செய்யப்படாமையின் காரணமாக கம்பனியால் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 5,148,080 ஆகக் காணப்பட்டதுடன் இந்த பெறுமதியையும் உள்ளடக்கி அத் திகதியில் ஒலிபரப்புக் கூடத்தின் வாடகை காணிக்காக செலுத்த வேண்டிய மொத்தப் பெறுமதி ரூபா 18,511,280 ஆகக் காணப்பட்டது. | யட்டியான்தொட்ட மற்றும் ஏனைய ஒலிபரப்புக் கூடங்களுக்குரிய காணிக்காக நிலுவை பணமாக ஏற்பட்டிருந்த பெறுமதி மாதாந்த காசு பெறுவனவுகளின் பிரகாரம் நாளாந்த வியாபார நடவடிக்கைகளை பேணி நடாத்திச் செல்வதற்காக செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை மேற் கொண்ட பின் செலுத்தப் படுகின்றது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த நிலுவைப் பணத்தை குறைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகைப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 மே 25 ஆம் திகதிய PED 1/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை, 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதிய PED 1/2015(i) மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 1/2015(ii) சுற்றறிக்கை. | கம்பனியின் தலைவரால் மீளாய்வாண்டில் ரூபா 600,000 போக்குவரத்துப் படியும், ரூபா 614,220 எரிபொருள் படியும் பெறப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் உத்தி யோகபூர்வ வாகனமும் அந்த உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதற்காக ரூபா 966,524 பெறுமதியான எரிபொருள் லீற்றர் 2786 உம் பயன் படுத்தப்பட்டிருந்தது.<br><br>பிரதிப் பொது முகாமையாளரால் (சந்தைப்படுத்தல்) அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி மேலதிகமாக எரிபொருள் லீற்றர் 1135 பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த எரிபொருள் அளவின் பெறுமதி ரூபா 392,722 ஆக இருந்ததுடன் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருளுக்காக மாதாந்தம் உரிய உத்தியோகத்தரின் சம்பளத்தில் இருந்து மொத்தப் பெறுமதி ரூபா 192,901 அறவிடப்பட்டிருந்த போதிலும் மீதி ரூபா 199,821 பெறுமதியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிறுவனங்களில் அமுல்படுத்தப்படுகின்ற சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் வருமான நிலையை அதிகரித்துக் கொள்வதற்கு, நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக பேணிச் செல்வதற்கும் மற்றும் சேவைத் தன்மையை முன்னுரிமையாகக் கொண்டு பணிப்பாளர் சபை சில தீர்மானங்களை எடுக்கின்றது. இதன் பிரகாரம் பணிப்பாளர் சபைத் தீர்மான இலக்கம் 259/22 இன் பிரகாரம் தலைவருக்கு வரையறையின்றிய எரிபொருள் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>எதிர்வரும் சில மாதங்களில் இந்த மேலதிகமாகப் பயன்படுத்தப்பட்ட எரிபொருளை அவரின் சம்பளத்தில் இருந்து அறவிடுவதற்கு முடியுமாக உள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/29 அரச நிருவாக சுற்றறிக்கை. | வாகனமொன்று வழங்கப்படும் போது தகைமை பெற்ற உத்தியோகத்தர்கள் காலம்தாழ்த்த முடியாமல் அவசரமாக உத்தியோகபூர்வ கடமைகளுக்காக வாகனம் ஒன்றை வழங்கும் தேவை தொடர்பாக உரிய நிறுவனத் தலைவர் தனிப்பட்ட ரீதியில் | பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப) இற்காக வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்காக உத்தியோகபூர்வ சாரதி ஒருவர் தொடர்ச்சியாக | சுற்றறக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஏற்றுக்கொள்வாராயின் மாத்திரம் உத்தியோக பூர்வ வாகனம் ஒன்றை ஓடுவதற்கு அவ்வாறன வருக்கு அனுமதி வழங்க முடியுமாக இருந்த போதிலும் பிரதிப் பொது முகாமையாளர் (தகவல்) இற்கு ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனம் நிறுவனத் தலைவரின் அனுமதி இன்றி உரிய உத்தியோகத்தர்கள் எடுத்திச் சென்றிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | சேவையில் ஈடுபடுத்துவதற்கு நிறுவனத்தின் போக்குவரத்து பிரிவிற்கு உரியதாக சாரதிகளின் எண்ணிக்கை போதியளவில் இல்லாதிருந்ததுடன் நிறுவனத்தின் சாரதிகள் குழாம் சாரதிகளாக இல்லாதிருந்த சந்தர்ப்பத்தில் இந்த உத்தியோகத்தரின் கடமை பிரயாணங்களுக்காகவும் மற்றும் வீட்டிற்கு வந்து செல்வதற்காகவும் தனிப் பட்ட நடவடிக்கைகளுக் காகவும் வாகனத்தை ஓடுவதற்கு அங்கீகாரம் வழங்குதல் நிறுவனத்திற்கு இலாபமாகவும் வினைத்திறனாகவும் இருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 213,739,466 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 361,564,273 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் கடந்த ஆண்டின் நட்டம் ரூபா 147,824,807 இனால் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் உற்பத்தி வருமானம் ரூபா 110,926,325 அதாவது 1495 சதவீதத்தால் அசாதாரணமாக உயர்வடைந்து சென்றமை நட்டம் குறைவடைவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

2022 ஆம் ஆண்டின் போது ரூபா 1,394,783,090 ஆன ஒலிபரப்புக் கால விற்பனை வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 1,385,459,165 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1 சதவீத குறைவாகும். ஏனைய வருமானம் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 138,847,672 உம், மீளாய்வாண்டின் போது ரூபா 215,718,957 ஆகவும் இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 36 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. தேறிய நிதி வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 70,597,357 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 54,907,485 அதாவது 29 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 579,015,447 ஆன நிகழ்ச்சித்திட்ட செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 541,971,672 ஆகக் காணப்பட்டதுடன் அதாவது 6 சதவீதத்தால் நிகழ்ச்சித்திட்ட செலவினம் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் விற்பனை செலவினம் ரூபா 97,563,953 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 97,326,223 ஆன விற்பனை

செலவினம் 0.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் ஏனைய செயற்பாடுகள் மற்றும் நிருவாக செலவினம் ரூபா 1,282,361,160 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,268,848,083 அதாவது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1 சதவீதம் குறைவாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் ஒலிபரப்புக்கூட கோபுரம் தொலைபேசி கம்பனிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த தொலைபேசி கம்பனிகளுடன் கைச்சாத்திடப்பட்ட 05 உடன் படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் கைச்சாத்திடப்பட்ட காலப் பகுதிக்குரிய அந்த உடன்படிக்கை புதுப்பிக்காமல் தொலைத் தொடர்பு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் தொலைத் தொடர்பு வசதிகளை வழங்குவ தற்காக 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு தொலைபேசிக் கம்பனிகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 19,971,680 ஆகக் காணப்பட்டது. | தொலைத்தொடர்புக் கோபுரங்களை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக சில சேவைப் பங்களிப்பு நிறுவனங்களின் உடன் படிக்கைகளை புதுப்பிப்ப தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அந்த உடன்படிக்கையை புதுப் பித்தவுடன் சேவை வழங் குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. சேவை பங்களிப்பாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணத்தை தற்போது அறவிடப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | முறையான உடன் படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனிக்கு எதிராக 01 அவதூறு இழப்பீட்டு வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் அதற்காக கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூபா 50,000,000 ஆகும். இலங்கையில் ஊடகத் துறையின் மூலம் திரைப்படங்களைக் காட்சிப்படுத்துதல், பகிர்ந்தளித்தல், விற்பனை செய்வதற்கு உரிய உரித்து கம்பனியால் மீறப்பட்டமைக்கு எதிராக 06 வழக்குகளும், கம்பனிக்கு எதிராக திரைப்படங்களை புலமைச் ஆதன வழக்குகள் 05 தொடரப்பட்டி ருந்ததுடன் அந்த வழக்குகளுக்காக கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகை முறையே ரூபா 490,000,000 மற்றும் ரூபா 20,325,000 ஆகும். ஏனைய விடயங்களுக்காக 03 வழக்குகளும் கம்பனிக்கு எதிராக தொடரப் பட்டிருந்ததுடன் அதற்கான இழப்பீட்டுத் தொகை ரூபா 15,000,000 ஆகும். இந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,227,617 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 125 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது ஒவ்வொரு நாளும் வழக்கு நடவடிக்கைகள் சராசரியான பிரகாரம் ஏற்பட்டிருந்தமையும் 2022 ஆம் ஆண்டில் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட வழக்குகள் 2023 ஆம் ஆண்டில் விசாரணைக்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டமையும், பொருளாதார நெருக்கடியுடன் சகல செலவினங்களும் உயர்வடைந்து சென்றமையால் சட்டத்தரணிகள் கட்டணமும் உரிய சிரேஷ்ட சட்டத்தர ணியால் 2023 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டமை 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் சட்ட நடவடிக் கைகளுக்காக செலவிடப் பட்ட செலவினம் உயர் வடைந்து சென்றமைக்கு காரணமாக இருந்தது. | வெளித் தரப்பின ருடன் கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு தாக்கமளித்த விடயங்களைக் குறைக்கும் வகையில் கம்பனி செயற்படுவதைக் கண்காணித்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கம்பனி 2023 சனவரி 01 முதல் திசம்பர் 31 வரையான காலத்தில் 20 உள்நாட்டு தொலைக்காட்சி நாடகங்களை ரூபா 310,310,000 கிரயத்தில் கொள்வனவு செய்து ஒலிபரப்புச் செய்திருந்ததுடன் அதில் 14 தொலைக்காட்சி நாடகங்களின் ஒலிபரப்பின் மூலம் மீளாய்வாண்டின் போது 65,415,985 நட்டம் பெறப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்குக் கிடைக் கின்ற மொத்த வருமானத்தில் 80 சதவீதம் - 85 சதவீத அளவு தொலைக்காட்சி நாடக ஒலிபரப்பினாலே கிடைக்கின்றது. தொலைக்காட்சி நாடக வருமானமாக ஒட்டுமொத்த தொலைக் காட்சி நாடகங்களிலிருந்து கிடைத்த வருமானமே கருதப்பட்டமையால் தொலைக்காட்சி நாடகங்களுக்காக செலவிடப்பட்ட தொகையுடன் ஒப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு தொலைக்காட்சி நாடகங்களுக்கும் தனித்தனியாக இல்லாதிருந்ததை குறிப்பிடுகின்றோம். | நட்டம் ஏற்படுவதை தடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் உரிமை மூலதனம் 2015 ஆம் ஆண்டில் ரூபா 3,198,499,721 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 654,161,058 ஆன உரிமை மூலதனம் மீளாய்வாண்டின் போது ரூபா 489,921,592 வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. கம்பனி 2016 ஆம் ஆண்டில் இருந்தது 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 107,189,266 தொகையில் இருந்து ரூபா 361,564,271 வரை நட்டம் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டிலும் ரூபா 213,739,466 ஆக தொடர்ச்சியாக நட்டம் பெற்றிருந்தது. மீளாய்வாண்டில் சுயாதீன தொலைக்காட்சி சேவையில் நட்டம் ரூபா 180,808,436 ஆக இருந்ததுடன் அதன் கீழ் காணப்படுகின்ற வசந்தம் டிவீ, ஐடீஎன், எப்எம் நட்டம் முறையே ரூபா 9,882,712 மற்றும் ரூபா 27,816,668 ஆக இருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது தேறிய நட்டம் ரூபா 361,564,273 வரையில் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு நட்டம் ரூபா 164,239,466 ஆகும். அது கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 54 சதவீதத்தைவிட அடுத்த பெறுமதியில் நட்ட நிலைமையை குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது.<br><br>2023 ஆம் ஆண்டின் போது நட்ட நிலைமை குறைக்கப்பட்ட போதும் நட்ட நிலைமையின் காரணமாக உரிமை மூலனம் குறைவடைந் திருந்த போதும் 2024 ஆம் ஆண்டின் போது இலாப மட்டத்தை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் வருமானம் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. | நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கும் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | குறித்துரைத்த திகதியில் மின்சாரப் பட்டியல் செலுத்தாமையின் காரணமாக வட்டிச் செலவினமாக ரூபா 1,000,242 மேலதிக செலவினமொன்றை செய்ய வேண்டிமைக்கு கம்பனிக்கு ஏற்பட்டிருந்ததுடன் குறித்துரைத்த | மின்சாரம் துண்டிக்கப்ப டாத வகையில் குறித்துரைத்த திகதியில் மின்சாரப் பட்டியல் செலுத்தப்படுகின்றது. இது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியுள்ளது என அறியத்தருகின்றோம். | செலுத்த வேண்டிய மின்சாரப் பட்டியல்களை குறித்துரைத்த திகதியில் செலுத்துவதன் மூலம் |

| | | |
|---|---|---|
| திகதியில் செலவினங்களை தீர்க்காமல் எழுந்திருந்த நட்டத்தை தவிர்ந்து கொள்வது தொடர்பில் முகாமைத்துவம் போதியளவான கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | மேலதிக செலவனங்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்றை அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கம்பனியால் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,588,500 பெறுமதியான Hot Swappable Power Distribution Rack இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,218,275 ஆன Aros Flexus FT - 30 KVA UPS System இயந்திரம் 04 வருடங்கள் அளவிலான காலத்தில் இருந்து பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | Hot Swappable Power Distribution Rack இயந்திரம் பொருத்தப்பட்ட போதிலும் அதற்குரிய ஏனைய உபகரணங்கள் அரசாங்கத்தின் இறக்குமதி கட்டுப்பாட்டுக் கொள்கை மற்றும் இறக்குமதியில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக அதை அமுல்படுத்தும் நிலைக்கு கொண்டுவர முடியாதிருந்தது.<br><br>30 KVA UPS System மின்சார தாக்கத்தினால் செயலிழந்திருந்தது. காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக $1^1/_2$ வருடங்களுக்கு அதிகமான காலம் எடுத்திருந்தது. அதன் பின்னர் இறக்குமதி கட்டுப்பாட்டின் காரணமாக மேலும் ஒரு வருடம் அளவிலான காலம் எடுத்திருந்ததுடன் டொலர்களில் காணப்பட்ட நெருக்கடி நிலைமையின் காரணமாக அதற்குரிய மேலதிக உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாத நிலைமையும் எழுந்திருந்தது. | சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |